1998 மார்ச் 20]

34—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

***9188—திரு. அ. சுடலைமுத்து :**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. அ. சுடலைமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் தொகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் விவசாயம் மற்றும் கால்நடைகளையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். போடிநாயக்கனூர் தொகுதி கேரள மாநில எல்லையை ஒட்டியுள்ளதாகும். பசுமை நிறைந்த கிராமங்களில் வாழும் மக்கள், பால் உற்பத்தியில் மிகவும் நாட்டம் கொண்டிருக்கிறார்கள். தேனியிலுள்ள ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்திற்குப் பால் வழங்குவதில் முதலிடம் வகிப்பது போடிநாயக்கனூர் தொகுதிதான். அவ்வாறு தேனிக்குக் கொண்டு செல்கிற வகையில், பால் வீணாகச் செலவாகிறது. எனவே, பால் உற்பத்தியைப் பெருக்க, போடிநாயக்கனூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் பகுதியில் நாள் ஒன்றுக்கு 8,200 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள தேனியில் இயங்கி வரும் 50 ஆயிரம் லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையத்திற்கு எவ்வித சிரமுமின்றி பால் எடுத்துச் செல்லப்பட்டு குளிரூட்டப்படுகிறது. ஆகவே, பால் குளிரூட்டும் நிலையம், போடிநாயக்கனூரில் அமைக்க சாத்தியம் இல்லை.